முருகப்பெருமான் துணை

**மகான் வாயிலார் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.11.2023, வெள்ளிக்கிழமை

1. எங்கு காணினும் கயமையடா
எல்லாம் கலியின் கொடுமையடா
வம்புதும்புகள் மிகுதியடா
வஞ்சம் சூழ்ச்சியாய் இருக்குதடா
2. அடடா இந்தக் கொடுமை கண்டு
அகிலம் மீட்க அவதாரம்புரிந்த
இடர்வெல்லும் அரங்கன் மகிமை
இன்னும் அறிந்தனுகா பேதமை கொண்ட
3. கொண்ட மக்களின் அவலம் கண்டு
கூறுகின்றேன் வாயிலார் நாயனாரும்
தொண்டென அறிவுரை ஆசிதனை
தக்க சோபகிருது தேள்திங்கள் தன்னில்
4. தன்னிலே ஏகதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் முதல் நாள், 17.11.2023, வெள்ளிக்கிழமை)
தரணிக்கு நல்மாற்றம் காணவுரைப்பேன்
எண்ணமதில் நற்குணம் நன்னடத்தை
எல்லாம் இறைசெயலெனும் தெளிவு
5. தெளிவுதிடமுற தன்னலம் விட்டு
தேசநலம் தியாககுணம் அடைந்து
அழிவான கயமை ஆக்கினை அனைத்தும்
அகன்று உலகம் பாதுகாப்புடன் இயங்க
6. இயங்கவே அரங்கஞானி காட்டுகின்ற
இணையிலா தயவு நெறி ஏற்று
தயங்கா மெய்ஞானம் பயின்று
தான்என்ற கர்வம் தமக்கென்ற சுய நலம்

7. சுயநலம் அகலும்படி சரணாகதி
சீவகாருண்யம்பட வாழும் உயர்நெறி
தயங்கா ஏற்றுத் தொடரவே
தன்னார்வ சேவை நிலையாக மாறி

8. மாறியே கலியின் கொடுமையான
மாயை நிலை அனைத்தும் விலகும்
ஆறுமுக அரங்கன் காட்டும் அறநெறி
அற்புதமென விளங்கி உலகமெல்லாம்

9. உலகமெல்லாம் விரிந்து பரவி
உயிர்கொலை நீக்கி வாழும் உத்தமர்களாக
கலகமிடர் கயமை சூழ்ச்சி இல்லா
கண்ணியவான்களாக ஞானவான்களாக மக்கள்

10. மக்கள் எல்லாம் மாற்றம் அடைந்து
மகத்துவம் கூடி அரங்க ஞானி வழி
தேக்கமின்றி ஞான வாழ்வு பெறுவர்
தேசமெங்கும் ஞானசமூகம் படைத்து

11. படைத்துமே ஞானவான்கள் தலைமை
பண்புடன் அமைத்து மாற்றம்
தடையற அரங்கன் ஆசிபெற்றவர்கள்
தக்க உலகமாற்றத்தை நிகழ்த்துவர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–